செ.வெ.எண்: 27/ஜூன் நாள்: 11.06.2018

## துணிகர செயல்கள் செய்த மகளிருக்கு கல்பனா சாவ்லா விருது-2018

தமிழக அரசு துணிகர செயல்கள் செய்த மகளிருக்கு கல்பனா சாவ்லா விருதினை நிறுவியுள்ளது. 2018ம் ஆண்டிற்கு துணிகர செயல்கள் புரிந்த மகளிரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இவ்விருது துணிகர செயல்கள் புரிந்த தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு மகளிருக்கு சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

எனவே தருமபுரி மாவட்டத்திலுள்ள துணிகர செயல்களில் ஈடுபட்டுள்ள மகளிர் தங்களது கருத்துருக்களை அடிப்படை குறிப்புகளுடன் (Bio-Data) உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 116-ஏ, ஈ.வெ.ரா பெரியார் நெடுஞ்சாலை, நேரு பூங்கா, சென்னை-84 என்ற முகவரிக்கு 20.06.2018க்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**